# அறிவாளர்களே! ஆராய்ந்து பாருங்கள்!

**மௌலவி அல்ஹாஜ் அஷ்ஷெய்கு அப்துல் காதிர் ஆலிம் ஸூபி காதிரி கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஜீஸ்**

**அறிக்கை – 3**

அல்லாஹ்வையும், அண்ணல் நபிகளையும் அதிகம் நேசம் வைத்த அறிவாளர்களே! அருமை சகோதரர்களே! தற்காலத்தில் புதிதாகத் தோன்றியுள்ள இல்யாஸி தப்லீக் இயக்கம் வஹ்ஹாபிகளாகலேயே தோற்றுவிக்கப்பட்டது. அது வெளிக்கு 'தப்லீக் ஜமாஅத்து' என்ற அழகிய போர்வையைப் போர்த்திக் கொண்டு அந்தரங்கத்தில் வஹ்ஹாபியத்தைப் பரப்ப வந்திருக்கிறது. அதற்குள் வஹ்ஹாபிய நச்சுக்கிருமிகள் இருக்கின்றன. ஸுனனத்து ஜமாஅத்து மக்கள் அதில் சேரலாகாது என 'தப்லீக் ஜமா அத்தில் வஹ்ஹாபியத்தின் விஷக்கிருமிகள்' என்ற ஒரு நூல் வெளிவந்ததை நீங்கள் அறிவீர்கள். அதில் தற்கால தப்லீக் ஜமாஅத்தின் ஸ்தாபகர் அதைக் கூட்டிக் கலைப்பவர்கள் அத்தனை பேர்களும் வஹ்ஹாபிக் கொள்கையுடையவர்கள் என்பதாக அவர்கள் அந்தக் கெட்ட கொள்கைகளை எழுதியுள்ள நூல்களின் பெயர்கள் பக்க நம்பர்கள் உள்பட அந்த வாசகங்களையும் அப்படியே எடுத்துக்காட்டி இக்கொள்கைகள் நம் ஸுன்னத்து ஜமாஅத்துக் கொள்கைகளுக்கு முற்றிலும் விரோதமானது என்பதாக குர்-ஆன், ஹதீது, இமாம்கள,; உலமாக்களின் கித்தாபுகளிலிருந்து ஆதாரங்கள் தெளிவாகக் காட்டப்பட்டிருக்கிறது. அந்த நூலுக்கு மறுப்பாக சுமார் 2 வருடங்களுக்கு முன் 'தப்லீக் ஜமா அத்தில் வஹ்ஹாபியத்தின் விஷக்கிருமிகள் என்னும் புத்தகத்தைப் பற்றிய ஆராய்ச்சி' என்று ஒரு நோட்டீஸ் தென்காசி முஸல்மான் பத்திரிக்கை ஆசிரியர் மீ.இ.முஹம்மது அப்துல்காதிர் அவர்களால் வெளிவந்தது. பின்னால் உலமாபெருமக்களின் கை ஒப்பங்களுடன் விரிவான ஒரு மறுப்பு வெளியிடுவதாகவும்; அதில் குறிக்கப்பட்டிருந்தது.

அந்த ஆராய்ச்சி எனும் நோட்டீசைப் பார்த்து பள்ளி மாணவர்களும் கூட இஃது ஒரு பத்திரிக்கை ஆசிரியருடைய ஆராய்ச்சியா என்று எள்ளி நகைக்க கூடிய விதத்தில் அத்தனையும் அறிவுச் சூனியமாகவே இருந்தது. அதில் ஆசிரியர் அவர்கள் 'விஷக்கிருமிகள்' என்ற நூலில் வஹ்ஹாபியாக்களுடைய கொள்கைகளைப் பற்றி எழுதி இருப்பதையும், அது நம் ஸுன்னத்து ஜமா அத்து கொள்கைக்கு விரோதமானது என்பதற்கு காட்டப்பட்ட ஆதாரங்களையும் அப்படியே ஒப்புக் கொள்வதோடு இந்த கெட்ட கொள்கைகளை ஒரு பித்தம் பிடித்தவனுங்கூடச் சொல்லமாட்டான் என்றும் இவைகளெல்லாம் வஹ்ஹாபிக் கொள்கைகளானால் இதைப் பற்றி வஹ்ஹாபிகளிடம் கேட்டுக் கொள்ள வேண்டும். தேவுபந்திகளுக்கோ, தப்லீக்காரர்களுக்கோ இந்தக் கொள்கையைப் பற்றி எந்த விதமான சம்பந்தமுமில்லை. இவர்கள் சுத்தமான ஸுன்னத்து ஜமா அத்து கொள்கையுடையவர்கள் என்றும் எழுதி இருக்கிறார். என்னே இவரின் அறியாமை!

கெட்ட கொள்கைகளைத் தங்கள் நூல்களில் எழுதிய முகம்மது காஸீம் நானூத்தவி, றஷீது அஹ்மது கொங்கோஹி, கலீல் அஹ்மது அம்பேட்டி, அஷ்ரப் அலி தானவி இவர்கள்

எல்லாம் யார்? தேவுபந்து தாறும் உலூம் மத்ரஸாவின் ஸ்தாபகரும், அதின் பிரதான ஆசிரியர்களும் தேவுபந்துகளால் ஹகீமுல் உம்மத், செய்குல் ஹிந்து என்றும் கொண்டாடப்படுகிறவர்களுமில்லை? தப்லீக்கின் ஸ்தாபகர் இல்யாஸ் அவர்களிடம் கல்வி படித்து இரவு பகலாக அவர்களின் சகவாசத்திலிருந்து அவர்களிடம் முரீதுமாகி அவர்களை வலி, குதுபு என்றும் இவர்களெல்லாம் என்னுடைய உடலிலும், உயிரிலும் குடிகொண்டிருக்கிறார்கள் என்று சொல்லவில்லையா? இந்த தப்லீக்கின் போதனை அவருடையது பிரசாரம் என்னுடையது என்றும் இல்யாஸ் சொல்லவில்லையா? அப்படியானால் அவர்களால் சொல்லப்பட்ட கெட்ட கொள்கைகளை இல்யாஸ் கரி கண்டு ஆமோதித்தவர்தானா இல்லையா?

சோதரீர்! இன்னும் கனம் தெ.மு.ப.ஆசிரியர் அவர்களின் விசித்திர ஆராய்ச்சியை பாருங்கள் 'நீங்கள் சொல்வது போல் அஷ்ரப் அலி தானாவியும், மற்றவர்களும் காபிர்கள் முற்றத்துகளானால் அவர்களின் உஸ்தாது ஹாஜி இம்காதுல்லாஹ் அவர்களும், அவர்களுடைய இதர முரீதீன்களும் அப்படித்தானே! அவர்களை ஒப்புக் கொண்ட உங்களையும் அப்படித்தானே சொல்லவேண்டும்' என்று கேட்டு எழுதி இருக்கிறார். ஆஹா! இதென்ன விசித்திரமான ஆராய்ச்சி! ஒரு பித்துப் பிடித்தவனுடைய மூளையிலாவது இந்த யோசனையும், ஆராய்ச்சியும் வருமா? நபி நூஹு (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் மகன் கன்ஆன் என்பவன் காபிராகி போனதினால் நபி நூஹு (அலைஹிஸ்ஸலாம்) அவர்களுக்கென்ன குறைவு இக்ரிமா (ரலியல்லாஹு அன்ஹு) அவர்களின் தகப்பன் அபூஜஹ்லு காபிராகிப் போனதினால் இக்ரிமா ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கென்ன குறைவு? ஒருவர் கெட்டக் கொள்கையுடையவராகிக் காபிராகிப் போனதினால் அவரின் தகப்பனையோ, ஞான ஆசிரியரையோ, மனைவியையோ, சீடரையோ, மற்றவர்களையோ, கெட்டவர்கள்! காபிர்கள்! என்று எப்படிச் சொல்ல முடியும்? ஆனால் அந்த கெட்ட கொள்கைளை இவரும் ஒப்புக் கொண்டால் அல்லது அவரின் கெட்ட, குப்ரியத்தான கொள்கையைத் தெரிந்திருந்தும் அவரை முஸ்லீம், வலி, குதுபு என்று சொல்வானேயானால் இவனும் அந்தக் கெட்ட குப்ரியத்தான கொள்கையை ஒப்புக்கொண்டவன் தான் என்றும் அவனைப் போலவே இவனும் வழி கெட்டவன், காபிர் என்றும்தான் சொல்லப்படும்.; இல்யாஸையும் இதற்காக தான் கெட்டவர் என்றும், அவரால் தோற்றுவிக்கப்பட்ட இந்த இல்யாஸித் தப்லீகு இயக்கமும் வழிக்கெட்ட வஹ்ஹாபி இயக்கம் என்றும் ஸுன்னத் அமாஅத் மக்கள் அதில் சேரக்கூடாது என்றும் சொல்கிறோம். நம்முடைய இந்தக் கருத்து உண்மையானது தான் என்பது ஒவ்வொரு அறிவாளிகளுக்கும் நன்றாய் விளங்கும்.; ஆகையினால்தான் தெ.மு.பத்ரிக்கை ஆசிரியரின் இத்தகைய விசித்திர ஆராய்ச்சிக்கு மறுப்பு எழுதத் தேவையில்லை என்று விட்டுவிட்டோம். ஆனாலும் அவரின் ஆராய்ச்சி நோட்டீஸில் பின்னால் உலமாபெருமக்களுடைய 'கை' ஒப்பத்தோடு விரிவான மறுப்பு வெளிவரும் என்று எழுதி இருந்த பிரகாரம் வரக்கூடிய மறுப்பாகிலும் அறிவோடு கூடியதாக இருக்குமாவென்றுதான் இதுகாலம் வரை அதை வழி பார்த்திருந்தோம்.

சுமார் இரண்டு வருடங்களுக்குப் பிறகு வெகு சிரமத்தோடு சில தினங்களுக்கு முன்னர் உலமா பெருமக்களாகிய மி.சு.முகம்மது அப்துல் காதிர் ஆலிம், இன்னும் நால்வர்கள் கை ஒப்பத்தோடு 6 பக்கங்கள் கொண்ட 'சிறப்புடையோர்களே சிந்தியுங்கள்' என்று ஒரு நோட்டீஸ் வெளி வந்தது. இந்த நோட்டீஸிலாவது 'விஷக்கிருமிகள்' என்ற தப்லீக் ஸ்தாபகர் இல்யாஸைப் பற்றியும், அவருடைய குருமார்களைப் பற்றியும் இவர்களெல்லாம் வஹ்ஹாபிக் கொள்கையுடையவர்கள், அந்தக் கொள்கையை ஆதரித்தவர்;கள் என்பதற்கு அவர்களின் நூல்களிலிருந்து காட்டப்பட்ட ஆதாரங்கள் எதையுமே, மறுக்கவோ அல்லது அவர்கள் அந்தக் கெட்ட கொள்கைகளை விட்டுப் பின்னால் தௌபாத் செய்து இன்ன நூலின் எழுதி இருக்கிறார்களென்றோ ஒரு ஆதாரமும் காட்டப்படவில்லை. ஆனால் 'விஷக்கிருமிகள்' என்ற நூல் உண்மைக்கு மாற்றமாகக் காட்டி அதனால் ஏதோ மறுப்பு எழுதிவிட்டதாகப் பொதுமக்களை ஏமாற்றப் பார்க்கிறார்கள். பொதுமக்கள் இவர்களின் விபரீத ஏமாற்று வார்த்தைகளை கண்டு ஏமாற மாட்டார்கள். ஆனால் இவர்களின் இந்த அறிவீனத்தைப் பார்த்து இதுதான் உலமா பெருமக்கள் கோஷ்டியின் அறிவு என்று தெ.மு.ப. ஆசிரியரின் விசித்திர ஆராய்ச்சியைப் பார்த்து நகைத்தது போல இதையும் பாhத்து எள்ளி நகைப்பார்களென்பதில் ஐயமில்லை.

வழிகெட்ட கொள்கையுடைவர்களான முகம்மது காஸிம் நானுத்தவி, றஷீது அஹ்மது கொங்கோஹி, கலீல் அஹ்மது அம்பேட்டி, அஷ்ரப் அலி தானவி, குலாம் அஹ்மது காதியானி இவர்களெல்லாம் தாங்கள் தங்கள் நூல்களின் கெட்ட கொள்கையை எழுதியதினால் இவர்களும் இவர்களைச் சரிகண்டவர்களும் காபிர் முற்தத்துகள் என்று ஹிஜ்ரி 1324-ல் மக்கா, மதீனாவிலுள்ள 35 உலமாக்கள் பத்வா (மார்க்கத்தீர்ப்பு) கொடுத்தார்கள். அத் தீர்ப்பு நூலுக்கு அப்ஜது கணக்குப்படி தீர்ப்புக் கொடுத்த ஆண்டைக் குறிக்கக்கூடிய விதத்தில் '**ஹுஸாமுல் ஹறமைன் அலாமன்ஹறில் குப்ரி வல்மைன்**' (குப்ரு அசத்தியதின் கழுத்திற்கு இரு புண்ணியஸ்தலங்களின் வாள்) என்று பெயரும் வைக்கப்பட்டது. அந்த பத்வா கிதாபை உருதுவில் மொழி பெயர்த்து ஒரு பக்கம் அறபியும் மறுபக்கம் உருதுவுமாக ஹிஜ்ரி 1328-ல் அச்சிட்டு வெளியாக்கப்பட்டது. அந்த பத்வாக்களில் ஒரு பத்வாவின் சுருக்கத்தை தமிழில் மொழிபெயர்த்து 'விஷக்கிருமிகள்' எனும் நூலில் சேர்த்திருந்தோம். அதில் அந்த பத்வாவை எழுதிய பெரியார். தங்களின் கை ஒப்பத்திற்கு பதிலாக அவர்களின் பேர் பொறிக்கப்பட்டிருந்த ஸீலை ஒப்பமாக வைத்திருக்கிறார்கள். அந்த ஸீலில் அவர்கள் ஸீல் செய்த ஆண்டான ஹிஜ்ரி 1291 எனும் இலக்கமும் பொறிக்கப்பட்டிருந்ததினால் அவர்கள் பெயருடன் அந்த ஆண்டும் விழுந்திருந்தது. தமிழில் மொழி பெயர்த்து அவர்கள் பெயரோடு அந்த ஆண்டையும் போடப்பட்டு விட்டது. நாலு பக்கமும் கட்டம் போட்டு அதற்குள் பெரியாருடைய பெயரையும் அந்த ஆண்டையும் போடவேண்டும். அல்லது பெயரையும், ஆண்டையும் எழுதி இது அவர்களின் பெயர் பொறிக்கப்பட்ட ஸீல் என்று எழுத வேண்டும். தவறாக 'விஷக்கிருமிகள்' முதல் பதிப்பில் விடுபட்டு விட்டது. இதை பற்றி முதல் பதிப்பு வெளிவந்த உடனே கண்ணியம் மிக்க இந்த உலமாக்கள் கோஷ்டிகளால் கேட்கப்பட்டதற்கு இது அவர்களின் ஸீலில் உள்ள ஆண்டு பத்வாக் கொடுத்த ஆண்டில்லை. பத்வா அச்சிடப்பட்ட ஆண்டை ஹிஜ்ரி 1328 என்று குறித்திருக்கின்றோம். மேலும் இந்த பத்வா ஹிஜ்ரி 1324ல்

கொடுக்கப்பட்டது. அந்த ஆண்டைக் கணிக்கக் கூடிய **'ஹுஸாமுல் ஹறமைன் அலாமன்ஹறில் குப்ரி வல்மைன்'** என்று பெயரும் இதற்கு வைக்கப்பட்டது என்று சொல்லி அந்த பத்வாக் கிதாபையும் அவர்கள் பார்வைக்கு கொடுத்தனுப்பினோம். பார்வை செய்து அனுப்பி வைத்தார்கள். பின்னர் 'விஷக்கிருமிகள்' இரண்டாம் பதிப்பிலும் மூன்றாம் பதிப்பிலும் அந்த ஸீலிலுள்ள ஆண்டு போடவில்லை. இதுதான் உண்மை விஷயம்.

அறிவாளிகளே! இந்த உ.பெ.ம கோஷ்டிக்கு 'விஷக்கிருமியில்' சொல்லப்பட்ட ஆதாரங்கள் எதையுமே மறுக்க வழியில்லாது போக்குமுட்டி அச்சில் ஸீல் என்று எழுதத் தவறி விடுபட்டதை பிரமாதமாக எடுத்துக்காட்டி (ஸீலில் உள்ள ஆண்டாகிய) ஹிஜ்ரி 1291-ல் அஷ்ரப் அலிக்கு 4 வயதுதான் 4 வயது குழந்தைகளுக்குத்தானா காபிர் முத்தத்து என்று பத்வாக் கொடுத்திருக்கிறார்கள்? என்றும், இதனால் 'விஷக்கிருமிகள்' நூலில் சொல்லப்பட்ட அத்தனையும் பொய் என்றும் எழுதினார்கள். அந்தோ! இதுதானா உ.பெ.ம கோஷ்ட்டியின் அறிவு. விஷக்கிருமிகள் எனும் நூலின் மக்கா மதினாவிலுள்ள 35 உலமாக்களால் கொடுக்கப்பட்ட ஹுஸாமுல் ஹறமைன் எனும் பத்வா கிதாபு ஹிஜ்ரி 1328-ல் அச்சிட்டு வெளிவந்தது என்று எழுதியிருப்பது இந்த உ.பெ.ம கோஷ்டிகளின் கண்ணுக்கு தென்படவில்லையா? மேலும் விஷக்கிருமிகள் நூலில் வழி கெட்ட கூட்டங்களான அஷ்ரப் அலிதானவி வகையறாக்கள் தங்கள் நூல்களில் அந்த கெட்ட கொள்கைகளை எழுதியிருப்பதை எல்லாம் எழுதிக்காட்டி இந்த விதமான கெட்ட கொள்கைகளை இவர்கள் தங்கள் நூல்களில் எழுதியதினால் மக்கா மதீனாவிலுள்ள 35 உலமாக்களால் இவர்களையும் சரிகண்டவர்கள் காபிர்கள், முற்தத்துகள் என்று பத்வாக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றும் எழுதியிருக்கிறோம். இந்த உ.பெ.ம கோஷ்டிகள் சொல்வது போல அஷ்ரப் அலி தானவிற்கு 4 வயதாக இருந்தால,; நாலு வயதாக இருக்கும் போது தானா இவர் இந்தக் கெட்ட கொள்கைகளை அதாவது:- ஹிப்ளுல் ஈமான்' எனும் நூலில் றஸூலுல்லாஹி (ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம்) அவர்களுக்கு மறைவான சங்கதிகள் தெரிவதுபோல் ஒவ்வொரு மதளைக்கும், பைத்தியக்காரர்களுக்கும், மிருகத்திற்கும் கூடத்தெரியுமே, இதில் நாயகத்திற்கு என்ன விசேஷமிருக்கிறது?' என்று எழுதினார் என்று சில பிள்ளைகள் தானும் கேட்பார்களே என்றுங் கூடவா இந்த உ.பெ.ம கோஷ்டிக்கு விளங்கவில்லை. அந்தோ உ.பெ.ம கோஷ்ட்டியின் அறிவீனம்.

சகோதரர்களே! கவனித்து பாருங்கள் 'விஷக்கிருமிகள்' என்ற நூலில் தற்கால தப்லீக் ஜமாஅத்தை ஸ்தாபித்தவர்கள் அதைக் கூட்டிக் கலைப்பவர்களெல்லாம் கெட்ட வஹ்ஹாபிகள், வஹ்ஹாபிக் கொள்கையை ஆதரித்தவர்கள் என்பதற்கு உதாரணமாக றஷீது அஹமது கொங்கோஹி என்பவர் முதன் முதலாக வஹ்ஹாபிக் கொள்கையைப் பரப்பிய முஹம்மதுபின் அப்துல் வஹ்ஹாபையும் அவருடைய ஆபாச நூலாகிய 'கிதாபுத் தொளஹீதை' உருதுவில் மொழிப் பெயர்த்துத் தன் கையிலிருந்தும் கொஞ்சம் சேர்த்து அதற்கு 'தக்வியத்துல் ஈமான்' என்று பெயர் வைத்து இந்தியாவில் முதன் முதலாக வஹ்ஹாபியக் கொள்கையைப் பரப்பிய இஸ்மாயில் திஹ்லவியை நல்லவர் என்றும், ஒலியென்றும் இவருடைய ஆபாசக் களஞ்சியமாக தக்வியத்துல் ஈமான் எனும் நூலைப் பார்ப்பதும் அதை

வீட்டில் வைத்திருப்பதும், அதன்படி அமல் செய்வதும் ஐனுல் இஸ்லாம் (இஸ்லாம்தானகும்) என்றும் வாயாறப் புகழ்கிறார். இந்த றஷீது அஹ்மதுதான் தப்லீக் ஜமாஅத்தின் ஸ்தாபகர் இல்யாஸின் பிரதான ஆசிரியரும் ஞான குருவுமாவர். இவரைத் தான் குதுபு என்றும், இவரைக் காணாமலிருந்தால் எனக்கு நிம்மதியே இல்லை, தூக்கத்திலிருந்து கூட விழித்து அவருடைய முகத்தைப் பார்த்துவிட்டு வந்து திரும்பவும் தூங்குவேன் என்றும் இல்யாஸ் சொல்கிறார். இந்த இல்யாஸால் உண்டாக்கப்பட்ட தப்லீகு இயக்கம் (ஏற்றினவாகு இயக்கும்) றஸூலுல்லாஹ் (ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம்) அவர்கள் கொண்டு வந்த மார்க்கத்தையும், அவர்களும் அவர்களின் ஸஹாபாக்களும் எந்தக் கொள்கை நடத்தையிலிருந்தார்களோ அதை எற்றி வைக்கக்கூடிய இயக்கமல்ல. இவர்கள் றஸூல் ((ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம்) அவர்களுடையவும் சங்கையான அவர்களின் ஸஹாபாக்களுடையவும் கொள்கைக்கு மாற்றமான 72 கூட்டங்களில் ஒரு கூட்டமான வழிக் கெட்ட வஹ்ஹாபியாக்களுடைய கொள்கைகளைத் தான் எற்றிவைக்கும் கூட்டமாகுமென்று 'வழிக்கெட்ட கூட்டத்தார்கள் கிட்டவும் போகாதீர்கள். அவர்களை உங்கள் கிட்டவும் வரவிடாதீர்கள். அப்படியானால்தான் அவர்கள் உங்களை வழி கொடுக்கவோ குழப்பத்திலாக்கவோ மாட்டார்கள்' என்ற திருநபி ((ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம்) அவர்களின் திருவசனப்படி ஸூ.ஜ.மக்கள் இந்த இல்யாஸி தப்லீக்கில் சேரக்கூடாது என்று தக்க ஆதாரத்தோடு எழுத்து மூலம் ஒருநூல் 1,2,3-வது முறையாகவும் இன்னொரு நூல் முதன் முறையாகவும் அச்சிட்டு எல்லா ஊர்களிலும் வெளிப்படுத்துகிறோம். எல்லாவூர் பொதுமக்களும் பார்த்திருப்பார்கள். இந்த நூல் வெளிவந்தது சுமார் 2½ வருடங்களுக்கு மேலாகும். இந்த நிலையில் இந்த உ.பெ.ம. கோஷ்டிகள் நமது நூல்களில் காட்டப்பட்ட ஆதாரங்கள் எதையுமே மறுக்க முடியாமல் (உண்மையை எப்படி மறுக்கவோ மறைக்கவோ முடியும்) 'நெஞ்சு உரமுள்ளவர்கள் யாரும் என்னிடம் தப்லீக் ஜமா அத்தைப் பற்றிக் கேட்டால் நான் ஜவாபு சொல்லத் தயார் சவால்விடுகிறேன்'. என்று எழுதுவதானது எவ்வளவு மதியீனம்! பேடித்தனம்.

சோதரீர்! சிந்தித்துப் பாருங்கள். மார்க்க ஞானம் கொஞ்சம்கூட இல்லாதிருந்தாலும் பணக்காரர்களாக மட்டும் இருந்தால் போதும். அவர்களைக் கொண்டு மற்றவர்களையெல்லாம் எளிதாக தங்கள் கூட்டத்தில் சேர்த்துக் கொள்ளலாம் என்ற குபாட நோக்கத்துடன் இந்த இல்யாஸி தப்லீகுப் பார்ட்டிகளால் எல்லா ஊர்களிலேயும் அந்தந்த ஊரிலுள்ள பணக்காரர்களையே அமீர்களென்று ஏற்படுத்தி, பாவம் அந்தப் பணக்காரர்கள் பதவி மோகத்தில் மயங்கி ஏமாந்து தங்கள் கையிலுள்ள பணத்தையும் சிலவு செய்தார்கள். இவர்களைப் பார்த்து மற்றவர்களும், ஏன் உலமாக்களுங்கூட நிர்பந்தமாய்ச் சேர வேண்டியதாகி, எங்குபார்த்தாலும் 'தப்லீக் நல்ல இயக்கம்'இ இதுதான் 'ஸஹாபாக்களுடைய வேலை' மற்ற உலமாக்கள் முன்னோர்களெல்லாம் இந்த வேலையை விட்டு விட்டார்கள். தப்லீக்காரர்கள் தான் அந்த வேலையைச் செய்கிறார்கள். இதில் எல்லோர்களும் சேரவெண்டுமென்று பிரமாதமாகப் பிரசாரம் செய்து மக்கள் எல்லாம் ஏமாற்றமாக கும்பல் கும்பலாகச் சேர்ந்து கொண்டிருந்த காலத்தில் (இற்றைக்கு சுமார் 2½ வருடங்களுக்கு முன்னால்) இந்த இல்யாஸி தப்லீக் இயக்கம் றஸூலுல்லாஹ் ((ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம்) அவர்களுடையதும், அவர்களின்

ஸஹபாக்களுடையதுமான நல்ல கொள்கைகளையும், நடத்தைகளையும் எற்றி வைக்கும் இயக்கமல்ல, அதற்கு மாறாக 'வஹ்ஹாபிகளுடைய கொள்கைகளை எற்றிவைக்கம் இயக்கமாகும்'இ இதற்குள் வஹ்ஹாபியத்தின் நச்சுக்கிருமிகள் இருக்கின்றன என்று ஆதாரத்தோடு மக்கள் இதில் சிக்குண்டு மோசம் போகாது வழிப்படைவான் வேண்டி 'தப்லீக் ஜமா அத்தில் வஹ்ஹாபியத்தின் விஷக்கிருமிகள் எனும் பெயருடன் நூல் வடிவமாக அச்சிட்டு ஊரெங்கும் வெளியாக்கியது நெஞ்சு உரமா? அல்லது ஆதாரத்தோடு எழுதப்பட்ட அந்த நூல் வெளிவந்து சுமார் 2½ வருடமாகியுங்கூட அதில் சொல்லப்பட்ட ஆதாரங்கள் ஒன்றையாவது மறுக்கத் தக்க ஆதாரம் காட்ட முடியாமல் பேடித்தனமாக 'தப்லீக் விஷயமாக என்னிடம் கேட்டால் பதில் சொல்லத்தயார் சவால் விடுகிறேன்' என்று மட்டும் எழுதிப் போடுவது நெஞ்சு உரமா? தப்லீக் பற்றிய ஆட்சேபணைகளைத் தானே எழுத்து மூலம் நூல் வடிவமாக அச்சிட்டு ஆயிரக்கணக்கான பிரதிகளை பொதுமக்கள் மத்தியில் பரப்பியிருக்கிறோம். வேறு எதைக் கேட்கிறது? நூலில் சொல்லப்பட்ட ஆட்சோபணைகளைத் தவிர வேறு ஏதும் ஆட்சேபணை செய்தால் அல்லது கேள்விகள் கேட்டால் ஜவாபு சொல்லலாம் என்பதுதான் இந்த உ.பெ.ம கோஷ்டிகளின் வாசகத்திற்குப் பொருளா?

அறிவாளர்களே ஆராய்ந்து பாருங்கள், தப்லீக் ஜமா அத்தோடு நான் பல ஊர்களுக்கு சென்றிருக்கிறேன். அவர்கள் வாயிலிருந்து எவ்விதமான கெட்ட கொள்கைகளும் வரவில்லை. அவர்களிடம் மருந்துங்கூட வஹ்ஹாபிக் கொள்கை இல்லை என்று இந்த உ.பெ.ம கோஷ்டிகள் சொல்கிறார், என்ன அறிவீனம்! தப்லீக்காரர்கள் எந்த விதமான கொள்கைகளையும் சொல்லவில்லை என்றே வைத்துக் கொண்ட போதிலும் வஹ்ஹாபிக் கொள்கைகளுடைய அக்கெட்ட கொள்கைகளை நூல்களில் எழுதிய பூதங்களை அதாவது 'றஸூலுல்லாஹி ((ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம்) மவுத்தாகி மண்ணோடு மண்ணாகி விட்டார்கள்' என்றும், 'தொழுகையில் சேவையை ஜினாச் செய்கிற நினைப்பும் சொந்த மனைவியை ஜிமாஉ செய்கிற நினைப்பும் வருவது நல்லது செய்கு அவர் போன்ற பெரியோர்கள் றஸூல்லாஹி ((ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம்) அவர்களானாலும் சரியே, இவர்களின் ஞாபகம் வருகிறது தனது கழுதை, மாடு உடைய ஞாபகத்தில் மூழ்குவதைப் பாக்கிலும் எத்தனையோ மடங்கு கெட்டது' என்றும், இன்னும் இது போன்ற கணக்கிலடங்கா ஆபாசங்களை எழுதிக் கிறுக்கிய பித்தம் பிடித்தவனை (இஸ்மாயில் திஹ்லவியை) நல்லவர், வலி என்றும் அவருடைய ஆபாசக் களஞ்சிய நூலான தக்வியத்துல் ஈமானை' வீட்டில் வைப்பதும,; பார்ப்பதும் அதின்படி அமல் செய்வதும் இஸ்லாம் தானகும்; (ஐனுல் இஸ்லாம்) என்றும் சொல்வதோடு றஸூலுல்லாஹி (ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம்) அவர்களின் அறிவு இப்லீஸினுடைய அறிவை விடக் குறைந்தது என்றும், இப்லீஸ்க்கு அதிக அறிவுடென்பது ஈமானிலுள்ளது. றஸூல்லாவுக்கு அதிக அறிவு இருப்பதாக சொல்வது ஷிறுக்கு என்று சொன்ன தேவுபந்து பெரிய பூதம் றஷீது அஹமது கொங்கோஹியை வலி, குதுபு என்றும் அவரைக் காணாது எனக்கு மன நிம்மதியே இல்லை என்றும் சொல்லக்கூடிய இல்யாஸ் காந்திலவியை (தப்லீக் ஜமா அத்து ஸ்தாபகரை) முஸ்லீம் என்றும், பெரியார் என்றும், வலி என்றும் சொல்லி அவருக்கும் மற்றப் பூதங்களுக்கும் 'றஹ்மத்துல்லாஹி' என்று (ஆசீர்வாதம்) துஆ கேட்கிறார்களா இல்லையா? இப்போது ரஸூலுல்லாஹி ((ஸல்லல்லாஹு அலைஹி வ

ஸல்லம்) அவர்களை ஏசியவர்களைச் சரி கண்டவர்களை இவர்களும் சரி கண்டுவிடட்டார்களா இல்லையா? 'றஸூலுல்லாஹி ((ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம்) அவர்களை ஏசியவன் காபிராகிவிட்டான். ஏசியவனுக்கு வேதனையுண்டு என்பதிலோ அவன் காபிர் என்பதிலோ சந்தேகம் வைப்பவனும் காபிராகிவிடுவான்' என்பதாக முஸ்லீம்களெல்லோரும் ஏகோபித்துச் சொல்லியிருப்பதாக ஷிபா எனும் கிதாபிலும் மற்றக் கிதாபுகளிலும் சொல்கிறார். இன்னும் இமாம் இப்னு ஹஜர் (றஹமத்துல்லாஹி அலைஹி) அவர்கள் தங்களின் **அஃலாம்** எனும் கிதாபில் இமாம்களெல்லோர்களும் ஏகோபித்து எதைக் குப்ரு என்று சொல்கிறார்களோ அதுகளைப்; பேசக்கூடிய பாடத்தில் சொல்கிறார்கள் 'எவனாகிலும் குப்ரிய்யத்தான வார்த்தைகளைச் சொல்வானேயானால் அவன் காபிராகிவிடுவான்' அதைச் சரி கண்டவனும் அதை பொருந்தியவனும் காபிராகிவிடுவான்' (நவூதுபில்லாஹி மின்ஹா)

சகோதரர்களே! வழிகெட்ட கொள்கையுடைய றஷீது அஹ்மது கொங்கோஹி, கலீல் அஹ்மது அம்பேட்டி, அஷ்ரப் அலி தானவி முதலியவர்கள் தங்கள் தங்கள் நூல்களில் இன்னின்னவிதமாக எழுதியிருக்கிறார்ளென்று நூலின் பக்கம் வாசகத்தோடு குறித்து ஆதாரம் காட்டியிருக்கும்போது, அந்த ஆபாச வாசகங்கள் அவர்களால் எழுதப்படவில்லையென்றே (அந்த நூல்கள் அவர்களாலேயே எழுதப்பட்டதாக அவர்கள் கம்பெனிகளில் அச்சிட்டு இன்றுவரையும் விற்பனை செய்து கொண்டிருக்கும் போது எப்படி சொல்லமுடியும?;) அல்லது அவர்களின் அந்த வாசகங்களுக்கு நல்ல பொருள்படும்படியாக வலிந்துரையாகிலும் செய்து (துலாம்பரமான) தெளிவான பொருள்படும் வாசகத்திற்கு எங்கனம் வலிந்துரை-தாவிஸ் செய்;ய முடியும?;) அவர்கள் குப்ரை விட்டுப் பரிசுத்தமானவர்கள் என்றோ அல்லது அவர்கள் அந்தக் கொள்கைகளை விட்டும் தவுபாச் செய்து இன்ன நூலில் எழுதி இருக்கிறார்கள் என்றோ றுஜுவாகாமல் அவர்களெல்லாம் தங்கள் சீவியமெல்லாம் அந்தக் கெட்;ட குப்ரியத்தான கொள்கையிலேயே இருந்து அக்கொள்கையிலேயே மரணித்திருக்கும்போது அவர்களை ஆலிம், அல்லாமா, பெரியார் என்பதும் 'றஹ்மத்துல்லாஹி அலைஹி' என்று அவர்களுக்கு துஆக் கேட்பதும் ஆகுமா? அறிவாளர்களே, ஆராய்ந்து பாருங்கள்.

'முஷ்ரிகீன்கள் அவர்கள் நகர வாதிகள் என்பது தங்களுக்கு விளங்கிய பின்னர் அவர்கள் தங்களுக்கு சொந்தக்காரர்களாகவே இருந்த போதிலும் அவர்களுக்குப் பிழைபொறுக்கும் படி தேடுவது நபியவர்களுக்கும் ஈமான் கொண்டவர்களுக்கும் தகுமானதல்ல. (திருக்குர் ஆன் 9-113)

சகோதர்களே! தப்லீக்காரர்கள் காதியானிகளுக்குத் தக்க மறுப்பு கொடுத்;தார்கள். முஸ்லீம்களை அந்தக் கெட்ட காதியானிக் கொள்கையை விட்டும் காப்பாற்றினார்கள் என்றும் இந்த உ.பெ.ம. கோஷ்டிகள் எழுதிகிறார்கள். நாமும் அதை ஒப்புக் கொள்கின்றோம். காதியானிகளுக்கு ஸு ஜ உலமாக்கள் மறுப்பு எழுதியது போல் இந்தத் தப்லீக்கின் மூதாதைகளான தேவுபந்திகளும் நல்ல விதமாகவேதான் மறுப்புக் கொடுத்தார்கள். காதியானிகளை காபிர்கள், முற்தத்துகள் என்று (பத்வா)மார்க்கத் தீர்ப்புந்தான் கொடுத்தார்கள். ஆனாலும் காதிரியானிகளைப் போன்று இவர்களும் குப்ரியத்தான கொள்கைகளைத் தங்கள் நூல்களில் வெளியாக்கியதும் நீங்கள் எழுதிய கொள்கைகள் குப்ரியத்தானது என்று ஸு ஜ.

உலமாக்கள் மறுப்பு எழுதித் தெரியப்படுத்தியும் பல முறை அந்தக் கொள்கையையே அச்சிட்டு வெளிப்படுத்தினாலும் அவர்கள் காதியானிகளுக்கு மறுப்புக் கொடுத்தார்கள் என்பதற்காக அவர்களைக் காபிர் முற்தத்து வழிகெட்டவர்கள் என்றும் சொல்லக்கூடாதோ? அறிவாளிகளே, ஆராய்ந்து பாருங்கள், இவர்களுடைய குப்ரியத்தான கொள்கைகளைப் பற்றி 'காதியானி, தேவுபந்தி சம்பாசணை' என்று பின்னால் வரக்கூடிய நோட்டீஸையும் பாருங்கள்.

இறுதியாக ' கெட்ட கொள்கைக்காரர்களுடன் சேராதீர்கள், அவர்களை உங்கள் கிட்டவும் வரவிடாதீர்கள். அப்படியானால்தான் அவர்கள் உங்களை வழி கெடுக்கவோ குழப்பத்திலாக்கவோ மாட்டார்கள் என்ற திரு நபி வாக்கிற்கிணங்க வழி கெட்டவர்களால் உண்டாக்கப்பட்ட இந்த இல்யாஸி தப்லீகு ஜமாஅத்தில் சேராதீர்கள் ' தூதரே, உமது ரட்சகனிடமிருந்து உம்மளவில் இறக்கப்பட்டதை எற்றிவையும் '(திருக்குர்ஆன் 5.67) என்ற திருமறைப் பிரகாரமும் ' என்னைத் தொட்டும் ஒரு வாக்கியத்தையானாலும் ஏற்றி வையுங்கள்;'' என்ற திரு நபி வாக்கியப்பிரகாரமும் றஸூலுல்லாஹி ((ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம்) அவர்களுக்கு இறங்கியதும், அவர்களும், சங்கையான அவர்களின் ஸஹாபாக்களும் எந்தக் கொள்கை நடத்தைகளிலிருந்தார்களோ அதை (அதுதான் ஸுன்னத்து ஜமாஅத்துக்காரர்களின் கொள்கை) எற்றி வையுங்கள். அந்த உண்மையான தப்லீக்கில் ஈடுபடுங்கள். அதற்கு ஒரு குழுவொன்று அமைக்க வேண்டும்: அதற்கு இன்ன பெயர்தான் வைக்க வேண்டும் என்ற அவசியமில்லை. எப்படியும் செய்யலாம். சங்கையான ஸஹாபாக்கள் காலம் முதல் இதுகாலம் வரையிலும் இந்த உண்மையான தப்லீக்குப் பணியில் மக்கள் ஒருவரில்லாது போனால் இன்னொருவராகிலும் ஈடுபட்டுக் கொண்டுதானிருந்தார்கள், இருக்கிறார்கள். குர்ஆன் ஓதிக் கொடுத்தவர்களும் குர்ஆனுக்கு(இஃறபு) ஜபர்,ஜேர், பேசு வைத்தவர்களும், குர்ஆனைப் பிழையில்லாது ஓதுவதற்காக தஜ்வீது கித்தாபு எழுதியவர்களும் அதன்படி படித்து கொடுத்தவர்களும், குர்ஆனுக்கு நாயகம் ((ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம்) அவர்களும,; அவர்களின் ஸஹாபாக்களும் சொல்லிய வியாக்கியானத்தைத் தழுவி தப்ஸீர் (விரிவுரை) எழுதியவர்களும், ஹதீதுகளைத் தேடியெடுத்துச் சேர்த்து நூல் வடிவமாக எழுதியவர்களும், இன்ன ஹதீது ஸஹீஹானது, இன்னது ளஈபானது என்று விபரம் கூறியவர்களும், ஹதீதுகளுக்கு வியாக்கியானம் எழுதியவர்களும், தொழுகை, நோன்பு போன்ற அனுஷ்டானக் கடமைகளை எப்படி நிறைவேற்றுவது அவைகளில் என்னென்ன அம்சங்கள் இன்றியமையாத்ததும் அதின் உறுப்பும் போன்று அமைந்தது (பற்ளு) இன்னும் அதற்கு உறுப்பு போன்று இல்லாது புறம்பாக இருந்தும் இன்றி அமையாததது (சற்துகள்) இன்னும் அதைப் பழுதாக்கக்கூடியது ((முப்தில்) இன்னது இருந்தால் விஷேசமாகுவது (ஸுன்னத்து) இன்னது என்பனவற்றை குர்ஆன் ஹதீது ஸஹாபாக்களால் ஏகோபிக்கப்பட்டது (இஜ்மாவு) களிலிருந்து எடுத்து மக்கள் எளிதாக விளங்கிக் கொள்வான் வேண்டி நூல் வடிவமாக பிக்ஹு கிதாபு எழுதியவர்களும், நாயகம் ((ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம்) அவர்களும் அவர்களின் ஸஹாபாக்களும் கொண்டிருந்த கொள்கைகள் இன்னின்னது தான் என்று அகீதா கிதாபு எழுதியவர்களும,; வழி கெட்ட கொள்ளைக்காறர்களுடைய கெட்ட கொள்கைகளை விட்டு மக்களை காப்பாற்றுவான் வேண்டி அவை இன்னின்னதுகள் என்றும் அவைகள் குர்ஆன் ஹதீதுகளின் போதனைகளுக்கும் ஸஹாபாக்களின் கொள்கைகளுக்கும் முற்றிலும்

விரோதமானது என்றும் ஆதாரங்காட்டி மறுப்புக் கொடுத்தவர்கள், நூல்கள் எழுதியவர்களும் இந்த உண்மையான தப்லீக்கையே (எற்றி வைக்கும் பணியையே) தான் செய்தார்கள், செய்கிறார்கள். தனிப்பட்ட முறையில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையான தப்லீக் செய்து வருவது போல் கூட்டு முறையாக ஒரு கூட்டமாகச் சேர்ந்தும் அந்த வேலையைச் செய்தால் நல்ல பலன் உண்டாகும் என்ற நல்நோக்கமிருந்தால் அப்படியும் செய்யலாம். இத்தகைய கூட்டத்திற்கு ஒரு பெயர் வைத்துக் கொள்ள வேண்டுமென்றிருந்தால் எந்தப் பெயரையும் வைத்துக் கொள்ளலாம். ஆனால் வேலையின் நோக்கம் தான் உண்மையானதாக இருக்க வேண்டும். கெட்ட நோக்கத்தோடு கெட்ட கொள்கையை நபி ((ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம) அவர்களும், அவர்களின் சங்கையான ஸஹாபாக்களும் எந்தக் கொள்கை நடத்தையிலிருந்தார்களோ அதற்கு மாற்றமான வழி கெட்ட 72 கூட்டங்களுடைய கொள்கையை பரப்புவதற்காக எற்றி வைப்பதற்காக கெட்டவர்களால் உண்டாக்கப்பட்ட இயக்கமாக இருந்தால் ஒருபோதும் அதில் சேரவே கூடாது. அவர்களின் அழகான ' தப்லீகு ஜமாஅத்து' என்ற போர்டை (வெளிவேசத்தைக்) கண்டு ஏமாந்து விடக்கூடாது.

தப்லீகு ஜமாஅத்தை உண்டுபண்ணியவர்கள் அதைக் கூட்டிக் கலைத்தவர்களெல்லாம் வழி கெட்டவர்களாகவே இருந்த போதிலும் கெட்ட கொள்கையைச் சொன்னவர்களை நல்லவர்கள், பெரியோர்கள் என்றுதான் மதிக்கிறார்கள். அவர்களை புகழ்வதும், அவர்களுக்கு துஆக் கேட்டவும்தான் செய்கிறார்கள். கெட்டவர்களால் உண்டாக்கப்பட்ட இயக்கத்தில் அவர்களின் கெட்ட கொள்கையின் நச்சுப் புகைப்பட்டு அது விஷம் நிறைந்ததாகவேதான் இருக்கும.; அந்த இயக்கத்தில் சேர்ந்தவாகளுக்;கெல்லாம் அந்த நஞ்சுக் கிருமிகள் சிறுகச் சிறுக ஊடுருவிப் பாய்ந்து இறுதியாக இவர்களும் பூரணமாக அந்த கெட்ட கொள்ளைக்காறர்களைப் போலவேதான்; ஆகிவிடுவார்கள். இதற்காகத்தான் எம்முடைய நன்மை தீமைகளை எம்மைவிடவும் அதிகம் தெரிந்தவர்களும் எம்மீது அளவு கடந்த கிருபையுள்ளவர்களுமான றவூபுற் றஹீம் றஹ்மத்துன்லில் ஆலமீன் எம்பிரான் ((ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம்) அவர்கள் 'வழி கெட்ட கூட்டத்தார்கள் கிட்டவும் போகாதீர்கள்' அவர்களை உங்கள் கிட்டவும் வரவிடாதீர்கள் அப்படியானால்தான் அவர்கள் உங்களை வழிகெடுக்கவோ குழப்பத்திலாக்கவோ மாட்டார்கள்' என்று எமக்கு முன்னறிவிப்பாக உபதேசித்து எச்சரிக்கையும் செய்யாதார்கள்.

சகோதரர்களே, கூட்டமாகச் சேர்ந்து உண்மையான மார்க்க வேவை செய்ய வேண்டுமென்ற நன்னோக்கமிருந்தால் இந்த இல்யாஸி தப்லீக் ஸ்தாபகர் அதன் தலைவர்களோடுண்டான தொடர்பை அறுத்து விடுங்கள். அதற்கு ஒரே ஒரு வழியாவது தப்லீக்கு ஜமாஅத்து என்ற பேரை மாற்றி 'ஜமா அத்தே இற்ஷாது' உபதேசக் குழு-பிரசாரக் கூட்டம் அல்லது எந்தப் பெயரையாவது வைத்துக் கொண்டு குர்ஆன், ஹதீது, இமாம்கள் நல்லோர்களுடைய நற்போதனைகளை எடுத்துரைத்து மக்களுக்கு நேரான பாதையைப் போதியுங்கள். கிருபையுள்ள நாயன் நம் அனைவர்களையும் வழி கெட்டவர்களின் வழிகேடான பாதையை விட்டும் காப்பாற்றி நல்லோர்களின் நேரான வழியைக் காட்டி சீராக நடக்க நல்லருள் புரிவானாக. ஆமீன்.

பல கலைகளையும் கற்பிக்கக் கூடிய பெரிய கல்லூரிகளில் பல ஆண்டுகள் சிரமப்பட்டு மார்க்கக் கலை பலவும்; கற்று பரீட்ஷையில் தேரியவர்களுக்கே, மவுலவி, மவுலானா பாஜில் என்றெல்லாம் பட்டங்கள் வழங்கப்படுவது வழக்கம். ஆனால் தப்லீகு ஜமாஅத்தில் சேர்ந்தவர்களுக்கோ அவர்களுக்கு மார்க்க ஞானம் கொஞ்சமும் தெரியாது போனாலும் சரியே அறபி, உருது, பார்ஸி பாசையில் ஒரு வார்த்தைக்கூடத் தெரியாதிருந்தாலும் சரியே ஒரு சில நாட்கள் அவர்களோடு திரிந்தால் போதும் அவர்களால் மவுலவி, மவுலானா என்று பேர் வழங்கப்படுகிறது. இம்மாதிரி மிகவும் மிகவும் இலேசான மவுலானா, மவுலவி என்று பட்டம் பெற்றவர்கள் திண்ணை அரபிப் பள்ளிக்கூடங்களில் ஒரு சில கலைகளைக் கற்று மார்க்க ஞானம் தெரிந்து திண்ணை பள்ளிக்கூடத்தில் 4,5 மாணவர்களுக்கு மார்க்க ஞான ஆரம்பக் கல்வி கற்றுக் கொடுக்க கூடியவர்களுக்கு மவுலவி, மவுலானா சதுறு முகதற்றிஸு (தலைமை உபாத்தியாயர்) என்றெல்லாம் பேர் சூட்டுவது ஒரு ஆச்சரியமல்லை. ஆனால் தப்லீகு பார்ட்டிகளின் பழுத்த வஹ்ஹாபி தேவுபந்தி பூதங்கள் தங்களின் ஆபாசக் கட்டுரைகளெல்லாம் உருது, பார்ஸி பாசையில் ஒரு வார்த்தையாவது பொருள் தெரியாமலும் ஒரு வசனமாவது எழுத வாசிக்கத் தெரியாமலுமிருப்பவர்கள் 'தப்லீகு ஜமாஅத்தில் வஹ்ஹாபி கொள்கை மருந்துங்கூட இல்லை' என்று எப்படிச் சொன்னார்கள்? என்பது தான் ஆச்சரியம்!

இப்படிக்கு,

**ஏம்.அலவி ஆமிர்**

**ஹிஸ்புல்லாஹ் சபை,**

152, நாலாம் குறுக்குத் தெரு,

கொழும்பு – 11